விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆடி - 18 செவ்வாய் 03.08.2021 மலர் - 2, இதழ் - 119

# பாரத மாதா ஆலயம் - தி.மு.க.வின் விஷமம்


விஜயபாரதம்

தர்மபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டியில் பாரத மாதாவுக்கு மகத்தானதொரு ஆலயம் அமைத்திட வேண்டும் என்பது சுதந்திரப் போராட்ட வீரர் சுப்பிரமணிய சிவாவின் கனவு. இந்த நூற்றாண்டு கால கனவு பல காரணங்களால் தடைப்பட்டிருந்தது. காங்கிரஸ் கட்சியின் குமரி அனந்தன் இதற்காக குரலெழுப்பி வந்தார். ஆர்.எஸ்.எஸ் அமைப்பினரும் இந்தக் கோயில் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி வந்தனர்.

2010ல் பாப்பாரப்பட்டியில் சுப்பிரமணிய சிவா நினைவிடத்தை கருணாநிதி திறந்து வைத்தார். அங்கு ரூ.150 கோடியில் பாரத மாதா ஆலயமும் நூலகமும் அமைக்கப்படும் என்று முந்தைய அ.தி.மு.க ஆட்சியின்போது முதல்வர் எடப்பாடி கே. பழனிசாமி அறிவித்தார். கோயில் திறப்பு விழாவுக்கு பாரத பிரதமர் மோடியை அழைக்க திட்டமிடப்பட்டது. 90 சதவீத கட்டுமானப் பணிகள் நிறைவடைந்த நிலையில், தி.மு.க ஆட்சிக்கு வந்தது.

இந்நிலையில், இந்த ஆலயத்தை செய்தி மக்கள் தொடர்புத் துறை அமைச்சர் மு.பெ.சுவாமிநாதன் ஆகஸ்ட் 1ம் தேதி திறந்துவைத்தார். இன்னும் இரு நாட்களில் முதல்வர் ஸ்டாலின் தர்மபுரி வரவுள்ள நிலையில், அமைச்சர் தலைமையில் ஒரு சாதாரண நிகழ்வாக பாரத மாதா ஆலயத்தைத் திறந்து வைத்தது, தமிழக தேசபக்தர்களை வருத்தத்தில் ஆழ்த்தியுள்ளது.

அதுவும் ‘பாரத மாதா நினைவாலயம்’ என்று பெயரிட்டுள்ளார்கள். நினைவாலயம் என்பது இறந்தவர்களுக்கு வைப்பது. பாரத மாதா என்ற தெய்வத்துக்கு பிறப்பேது, இறப்பேது? அதென்ன ‘நினைவாலயம்’ என தேசபக்தர்கள் திடுக்கிறார்கள்.

ஆங்கிலேய அரசுக்கு சேவகம் செய்த நீதிக்கட்சியின் வழிதோன்றலான தி.மு.க, ஆட்சிக்கு வந்ததும் மக்கள் நலப் பணிகளைவிட, தேசிய ஒருமைப்பாட்டை சிதைப்பதிலேயே அதிக ஈடுபாடு காட்டுகிறது.

அடிமை சேவகம் செய்த நீதிக்கட்சி ஆட்சிக்கு நூற்றாண்டு விழா எடுக்கிறார்கள். ஆனால், தமிழகத்தின் தேசிய உணர்வை கொச்சைப்படுத்துகிறார்கள். இது தமிழக மக்களை முகம் சுளிக்க வைத்துள்ளது.

பாப்பாரப்பட்டி பாரத மாதா ஆலயத்துக்கு அவசர கதியில் நடைபெற்ற திறப்பு விழாவை ரத்து செய்து, பிரம்மாண்ட கும்பாபிஷேகம் நடத்தப்பட வேண்டும். அதற்கு மத்திய பா.ஜ.க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே தமிழக மக்களின் எதிர்பார்ப்பு.

# மறைமுக சொத்து வரி உயர்வா?




விஜயபாரதம்

திமுக ஆட்சிப் பொறுப்பை ஏற்றது முதல் விலைவாசிகள், மின் கட்டணம், சிமெண்ட் உள்ளிட்ட கட்டுமானப் பொருட்களின் விலை என அனைத்தும் கிடுகிடுவென உயர்ந்துவிட்டன. அந்த வரிசையில் தற்போது இடம் பெற்றிருப்பது சொத்து வரி உயர்வு. ஆனால், இதனை வரி உயர்வு என கூறாமல் 'கணக்குத் திருத்தம்' என்ற பெயரில் மறைமுகமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனை குறித்து கேட்டால், தனித்தனியாக ஒவ்வொரு சொத்து வரி கணக்கையும் திருத்தம் செய்துள்ளது என கூறுகின்றனர். இதனால் சொத்து வரியாக 30 முதல் 50 சதவீதம்வரை கூடுதல் தொகை கட்ட மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுகின்றனர். கொரோனா பொதுமுடக்கம் காரணமாக தற்போது, பலருக்கும் வேலை இல்லாத நிலை, வாடகை தர முடியாத, வாடகை வாங்க முடியாத சூழல் நிலவுகிறது. நகரங்களில் பல வீடுகள் இன்றும் காலியாகவே உள்ளன, விலைவாசி உயர்வு, குழந்தைகள் பள்ளிக் கட்டணம் என மக்கள் விழிபிதுங்கி நிற்கின்றனர். இந்த சூழலில் தி.மு.க அரசு, இதுபோன்ற மறைமுக வரி உயர்வுகளை அமல்படுத்தியுள்ளது வெந்த புண்ணில் வேலை பாய்ச்சும் நடவடிக்கையாகவே இருக்கிறது. முன்னதாக சட்டசபை தேர்தலின் போது தி.மு.கவின் தேர்தல் அறிக்கையில், 'சொத்து வரி உயர்த்தப்படாது' என, வாக்குறுதி அளிக்கப்பட்டதை மக்கள் மறக்கவில்லை என்பதை தி.மு.க நினைவில்கொள்ள வேண்டும். இதன் தாக்கம் அடுத்து வரவுள்ள உள்ளாட்சித் தேர்தலில் நிச்சயம் எதிரொலிக்கும்.

# சரித்திரம் படைத்த ஹாக்கி அணிகள்

டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் முதல்முறையாக பாரத மகளிர் அணி அரையிறுதிக்கு தகுதி பெற்று சாதனை படைத்துள்ளது. அதேபோல, 41 ஆண்டுகளுக்கு பிறகு பாரத ஆடவர் ஹாக்கி அணி ஒலிம்பிக் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது. அதுமட்டுமில்லாமல், இரண்டு அணிகளும் ஒரேசமயத்தில் அரையிறுதிக்கு முன்னேறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

விஜயபாரதம்



# அல்வா கொடுத்த தி.மு.க

நெல்லையில் செய்தியாளர்களிடம் பேசிய முன்னாள் மத்திய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன், 'அகில இந்திய ஒதுக்கீட்டில் ஓ.பி.சி பிரிவினருக்கு 27% இடஒதுக்கீடு, பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு 10% இடஒதுக்கீடு அறிவித்துள்ளார் பிரதமர் மோடி. இவை மாணவர்களுக்கு வரப்பிரசாதம். நீட் தேர்வை கொண்டு வந்தது காங்கிரசும் தி.மு.கவும்தான். கருணாநிதியின் சுட்டுவிரல் அசைவுக்கு மத்திய அரசு தலைவணங்கும் என்று சோனியா கூறினார். அவ்வளவு சக்தி படைத்த நீங்கள் ஏன் ஓ.பி.சி மாணவர்கள் பற்றி கவலைப்படவில்லை? இன்று நீட் பற்றி பேச தி.மு.க, காங்கிரசுக்கு அருகதை கிடையாது. கிராமப்புற மாணவர்கள் நலனுக்காக அ.தி.மு.க அரசு 7.5% இடஒதுக்கீடு கொடுத்தது. அடுத்தவர் குழந்தைகளுக்கு தனது இனிஷியல் போடும் வேலையை தி.மு.க செய்யக்கூடாது. தி.மு.கவினர் எந்த வாக்குறுதிகளையும் நிறைவேற்ற தகுதி அற்றவர்கள். வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் தி.மு.க மக்களுக்கு அல்வா கொடுக்கிறது. நீட் தேர்வை மத்திய அரசு கொண்டு வரவில்லை. உச்சநீதிமன்றம் வழிகாட்டுதலின் படிதான் நீட் கொண்டுவரப்பட்டது. சட்டப் பேரவையை நாடகம் ஆடுவதற்காக தி.மு.க பயன்படுத்தி வருகிறது' என்றார்.



விஜயபாரதம்

# வேவு பார்த்த காங்கிரஸ்



விஜயபாரதம்

மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் முக்தர் அப்பாஸ் நக்வி, பி.டி.ஐ செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில், 'காங்கிரசும் சில எதிர்க்கட்சிகளும் கோஷம் எழுப்பிவிட்டு ஓடும் சூத்திரத்தை பின்பற்றுகின்றனர். மக்கள் பிரச்சினைகள் குறித்து விவாதிக்க அவர்கள் ஆர்வம் காட்டவில்லை. கொரோனா பற்றி விவாதிக்க வேண்டும் என்றனர், ஆனால், அதற்கு அவர்களே உடன்படவில்லை. விவசாயிகள் பிரச்னை பற்றி விவாதம் தேவை என்றார்கள், அதனை செய்யவில்லை. நாட்டில் பல பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது, அது குறித்தும் அவர்கள் விவாதிக்கவில்லை. ஆனால், அவர்கள் புனையப்பட்ட ஒருசில பிரச்னைகளை முன்வைத்து நாடாளுமன்றத்தின் நேரத்தை வீணடிக்கின்றனர். முன்பு இதேபோல ரபேல் விவகாரத்தில் மக்களை தவறாக வழிநடத்த முயன்றது காங்கிரஸ். பின்னர் என்ன நடந்தது என்பது அனைவருக்கும் தெரியும். இன்று உளவுப் பார்க்கப்பட்டதாக கூச்சலிடுகிறார்கள். ஆனால், அவர்கள் ஆட்சியில் தனது சொந்த நிதி அமைச்சரை வேவு பார்த்ததாக அந்த அமைச்சரே அரசு மீது குற்றம்சாட்டினார். இதுதான் காங்கிரஸ்' என தெரிவித்தார்.

# அவகாசம் ஏன்?



விஜயபாரதம்

தமிழகத்தில் கொரோனா தொற்று பரவல் மீண்டும் அதிகரித்து வருகிறது ஒருபுறம் என்றால் கேரளாவில் கொரோனா கட்டுக்கடங்காமல் தலைவிரித்தாடுகிறது. இதனால், வெளி மாநிலங்களில் இருந்து குறிப்பாக கேரளாவில் இருந்து வரும் அனைவருக்கும் கொரோனா பரிசோதனை, எல்லைப்பகுதியில் கண்காணிப்பு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், கேரளாவில் இருந்து தமிழகத்திற்கு வரும் அனைவருக்கும் வரும் 5ம் தேதி முதல், ஆர்.டி.பி.சி.ஆர்., பரிசோதனை கட்டாயமாக்கப்படும். 'நெகட்டிவ்' சான்றிதழ் உள்ளவர்களும் இரண்டு தவணை தடுப்பூசி செலுத்தி, 14 நாட்கள் முடிந்தவர்களும் மட்டுமே, தமிழகத்திற்குள் அனுமதிக்கப்படுவார்கள் என தமிழக அரசு கூறியுள்ளதற்கு சமூக ஆர்வலர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். உடனே பரிசோதனையை துவக்காமல் எதற்காக இந்த தேவையற்ற காத்திருப்பு என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

# விஷ்வ ஹிந்து பரிஷத் கோரிக்கை



விஜயபாரதம்

விஷ்வ ஹிந்து பரிஷத் அமைப்பின் மத்திய பாரத செயற்குழு கூட்டம் போபாலில் கடந்த ஞாயிறு அன்று நடைபெற்றது. அதன் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய வி.ஹெச்.பி செயல் தலைவரும் உச்ச நீதிமன்ற மூத்த வழக்கறிஞருமான அலோக்குமார், ''கட்டாய மதமாற்றத்தைத் தடுக்க 11 மாநிலங்களில் சட்டங்கள் உள்ளன, இருப்பினும், இந்த பிரச்சனை நாடு முழுவதும் உள்ளது. எனவே இந்த பிரச்சினையை நாடு முழுவதும் ஒருமனதாக எழுப்ப வேண்டும். சட்டவிரோத மதமாற்றங்களுக்கு எதிரான சட்டத்தை ஒருங்கிணைக்க வேண்டும். அப்போதுதான் இந்த சாபத்திலிருந்து நாட்டிற்கு விடுதலை கிடைக்கும். இது குறித்த நீதிமன்ற வழக்குகள், கடந்த கால அனுபவங்கள், தற்போதைய சூழ்நிலைகள் அனைத்தும் இதற்கான அவசியத்தை மத்திய அரசுக்கு தெளிவாக உணர்த்துகிறது. எனவே மத்திய அரசு, இனியும் காலதாமதமின்றி முழு தேசத்திற்குமான கட்டாய மத மாற்றத்தடை சட்டத்தை இயற்ற வேண்டும்' என கோரிக்கை விடுத்தார்.

'முஸ்லிம், கிறிஸ்துவ மத அமைப்புகள் அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்படவில்லை. ஆனால், ஹிந்து வழிபாட்டுத் தலங்கள், மடங்கள் அனைத்தும் அரசுகளின் கட்டுப்பாட்டில் உள்ளன. அவற்றை அரசின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்க வேண்டும். பாரத எதிர்ப்பு மற்றும் ஹிந்து விரோத சதித்திட்டங்கள் குறித்து ஹிந்து சமூகம் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும், அனைத்து சட்டம், அரசியலமைப்பு முறைகள் மூலம் அதை தடுக்க வேண்டும்' என அந்த மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# தி.மு.க. அரசுக்கு மக்கள் கேள்வி



விஜயபாரதம்

தமிழகத்தில் உள்ள முக்கிய கோயில்களில் பக்தர்களுக்கு மூன்று நாட்களுக்கு அனுமதி மறுப்பு, மக்கள் அதிகம் கூடும் இடங்களில் கடைகள் மூடல் என கொரோனாவை காரணம் காட்டி கட்டுப்பாடுகளை விதிக்கும் தி.மு.க அரசு, இதே காலகட்டத்தில் செயல்பட்ட மசூதிகள், சர்ச்சுகளில் ஏன் இந்த கட்டுப்பாடுகளை விதிக்கவில்லை? அங்கு எல்லாம் கொரோனா பரவாதா, அவர்கள் இந்த தேசத்தின் மக்கள் இல்லையா, அவர்கள் கொரோனாவால் இறந்தால் தி.மு.க பொறுப்பேற்குமா அல்லது அனைத்து தரப்பு மக்களையும் பாதுகாக்கும் பொறுப்பு அரசுக்கு உள்ளதை அவர்கள் மறந்துவிட்டார்களா என கேள்வி எழுப்பியுள்ளனர்.

# வடகிழக்கில் வலுபெறும் பா.ஜ.க




விஜயபாரதம்

கடந்த 60 வருட காங்கிரஸ் ஆட்சி காலத்தில் கண்டுகொள்ளப்படாத வடகிழக்கு மாநிலங்களில், தற்போதைய பா.ஜ.க அரசு கொண்டுவந்துள்ள பல முன்னேற்றத் திட்டங்கள் காரணமாக மக்களின் ஏகோபித்த ஆதரவு வளர்ந்துள்ளது. இதனால் அங்கு தொடர்ந்து பா.ஜ.க வெற்றி பெற்று வருகிறது. இதனை உணர்ந்த பல எதிர்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து பா.ஜ.கவில் இணைந்து வருகின்றனர். அந்த வரிசையில், அசாமில் இரண்டு முறை காங்கிரஸ் எம்.எல்.ஏ’வாக இருந்த சுஷாந்தா போர்கோஹைன் தனது பதவியை ராஜினாமா செய்த்துடன் காங்கிரசில் இருந்து விலகினார். பின்னர் அசாம் முதல்வர் டாக்டர் ஹிமந்தா பிஸ்வா சர்மா முன்னிலையில் பா.ஜ.கவில் இணைந்தார். இதேபோல, மணிப்பூரின் ஆறு முறை காங்கிரஸ் எம்.எல்.ஏவாக இருந்த கோவிந்த கோந்தூஜம், தனது காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பதவியையும் மணிப்பூர் சட்டமன்ற உறுப்பினர் பதவியையும் ராஜினாமா செய்து, மணிப்பூர் முதல்வர் என் பிரேன் சிங் முன்னிலையில் பா.ஜ.கவில் இணைந்தார்.

# சாதனை படைத்த புவனேஸ்வர்



விஜயபாரதம்

ஒடிசா தலைநகர் புவனேஷ்வரில் 18 வயதை கடந்த அனைத்து மக்களுக்கும் கோவிட் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் 100 சதவீதம் தடுப்பூசி செலுத்திய சாதனையை நிகழ்த்திய முதல் நகரம் என்ற பெருமையை பெற்றது புவனேஷ்வர். இதுதவிர புலம்பெயர் தொழிலாளர்கள் ஒரு லட்சம் பேருக்கு முதல் தவணை கோவிட் தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளது. 100 சதவீதம் என்ற இலக்கை எட்ட நகரம் முழுதும் 30 ஆரம்ப சுகாதார நிலையங்கள்உட்பட 55 தடுப்பூசி மையங்கள், நடமாடும் தடுப்பூசி மையங்கள் நகரம் முழுதும் ஏற்படுத்தப்பட்டன என புவனேஷ்வர் மாநகராட்சி உதவி கமிஷனர் அன்ஷுமன் ராத் தெரிவித்தார்.

# தேசவிரோதிகளுக்கு செக்



விஜயபாரதம்

ஜம்மு காஷ்மிரில் அரசு பணியில் சேர்வதற்கும் வெளிநாடுகளுக்கு செல்ல பாஸ்போர்ட் பெறுவதற்கும் குற்றப்பிரிவு காவல்துறையில் (சி.ஐ.டி) இருந்து 'செக்யூரிட்டி கிளியரன்ஸ்' எனப்படும் நற்சான்றிதழ் அறிக்கையை பெற்று சமர்ப்பிக்கவேண்டியது கட்டாயம். இதற்கான சட்டத்திருத்தம் சமீபத்தில் செய்யப்பட்டது. அதன்படி, இதற்காக விண்ணப்பிக்கும் நபர், அரசியல் கட்சிகள், வெளிநாடுகளைச் சேர்ந்த அமைப்புகள் மற்றும் தடை செய்யப்பட்ட அமைப்புகள் உள்ளிட்டவற்றுடன் சம்பந்தப்பட்டவரா, அவரின் குடும்பத்தினர், உறவினர்கள் யாரேனும் அவற்றில் தொடர்பில் இருக்கின்றனரா என்பது ஆராயப்படும். அவரின் அனைத்து டிஜிட்டல் ஆவணங்கள், குற்ற வழக்கு ஆவணங்கள் ஆராயப்படும். அதன் பின்பே அவருக்கு நற்சான்றிதழ் கிடைக்கும். இதனால், வன்முறையாளர்கள், பயங்கரவாத ஆதரவாளர்கள், கல் எறிபவர்கள் என அனைத்துவகை தேச விரோத செயல்களில் ஈடுபடுபவர்களையும் வழக்குக் கொண்டுவந்துள்ளது ஜம்மு காஷ்மிர் யூனியன் பிரதேச நிர்வாகம்.

# மிஷனரி தலைவர் கைது



விஜயபாரதம்

அசாமின் திப்ருகர் மாவட்டத்தில் உள்ள மோரன் ஹீலிங் மையம் எனப்படும் ஒரு கிறிஸ்தவ மிஷனரி தலைவர் ரஞ்சன் சூட்டியா என்பவர் அசாமிய மக்களால் பெரிதும் மதிக்கப்படும் குரு ஸ்ரீமந்தா சங்கர் தேவின் மத மற்றும் கலாச்சார படைப்புகளை தனது மத மாற்றத்திற்காக தவறாக பயன்படுத்தினார். அசாமிய மக்களின் பக்திபாடல்களான நபர் போர்கீட், நாம், குஷா ஆகியவற்றை ஏசுவின் பெயரில் மாற்றி மறுஉருவாக்கம் செய்து வெளியிட்டார். இது குரு ஸ்ரீமந்தா சங்கர் தேவின் லட்சக்கணகான சீடர்களை வருத்தப்பட வைத்தது. பலரும் இது குறித்து புகார் அளித்தனர் என அந்த சங்கத்தின் பொதுச் செயலாளர் பாபுல் போரா குற்றம்சாட்டினார். இதன் அடிப்படையில் ரஞ்சன் சூட்டியா கைது செய்யப்பட்டார்.

முன்னதாக, மோரானில் உள்ள தனது உலக குணப்படுத்தும் பிரார்த்தனை மையத்தில், ஏசு கிறிஸ்து தனக்கு கொடுத்த சிறப்பு சக்தியைக் கொண்டு அனைத்து நோய்களுக்கும் சிகிச்சை அளிப்பதாக கூறினார் ரஞ்சன் சூட்டியா. ஆனால், கைது செய்யப்பட்டபோது எடுக்கப்பட்ட கொரோனா பரிசோதனையில் அவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது என்பது கூடுதல் தகவல்.

# மாவோயிஸ்டுகள் சரண்



விஜயபாரதம்

நக்சலைட்டுகள் தியாகிகள் வாரத்தை அனுசரிக்கும் அதே நேரத்தில், சத்தீஸ்கரின் தண்டே வாடா மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினரிடம் மாவோயிஸ்டுகளின் மலங்கிர் பகுதி கமிட்டியின் பெண் மாவோயிஸ்ட் பயங்கரவாதி ரம்பதி பார்சே உட்பட 11 மாவோயிஸ்டுகள் பாதுகாப்பு படையினரிடம் சரணடைந்தனர். இவர்கள் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை கொள்ளையடித்தல், காவல்துறையினர் மீது துப்பாக்கி சூடு, வாகனங்களுக்கு தீ வைத்தல், பாலம் தகர்ப்பு உள்ளிட்ட பல கொடூர செயல்களில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டவர்கள். முன்னதாக, கடந்த வாரம், நான்கு நக்சல் பயங்கரவாதிகள் சத்தீஸ்கரின் தண்டேவாடா மாவட்டத்தில் சரணடைந்தனர்.

பிஜப்பூர் தாக்குதலுக்குப் பிறகு, இந்த பயங்கரவாதிகளை முடக்க பாதுகாப்புப் படைகள் எடுத்துவரும் அதிரடி நடவடிக்கைகள் தீவிரம் அடைந்துள்ளன. மறுபுறம், கடந்த 11 மாதங்களாக, மாவோயிஸ்டுகள் தங்கள் பயங்கரவாத செயல்களை விடுத்து வீடு திரும்புவதற்காக 'லோன் வரது' என்ற பிரச்சாரம் நடத்தப்படுகிறது. இது நல்ல பலன் அளித்துள்ளது. இதுவரை 397 மாவோயிஸ்டுகள் சரணடைந்துள்ளனர்.

# முஹரம் ஊர்வலம் அனுமதி இல்லை



விஜயபாரதம்

கொரோனா வழிகாட்டு நெறி முறைகள் அமலில் உள்ளதால், உத்தரப் பிரதேச அரசு, முஹரம் பண்டிகையை ஒட்டி நடத்தப்படும் ஊர்வலத்திற்கு அனுமதி வழங்கப்படாது என்று அறிவித்துள்ளது. இதற்கான உத்தரவை உத்தரபிரதேச டி.ஜி.பி முகுல் கோயல் பிறப்பித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில், அனைத்து காவல் நிலையத் தலைவர்களுக்கும் ஊர்வலம் நடத்தப்படாமல் அமைதி நிலவுவதை உறுதி செய்ய வேண்டும். அந்தந்த பிராந்தியங்களில் உள்ள மத நிர்வாகத் தலைவர்கள் இதற்காக உரிய நடவடிக்கை எடுத்து அமைதியை உறுதிப்படுத்த கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இ - ருபி

பிரதமர் நரேந்திர மோடி வீடியோ கான்பரன்சிங் மூலம் நேற்று இ - ரூபி, டிஜிட்டல் கட்டண தீர்வை அறிமுகப்படுத்தினார். இதற்கு முன், பணபரிவர்த்தனைத் துறையில் மத்திய அரசு அறிமுகம் செய்த பாரத சுயசார்பு வெற்றி திட்டங்களான யு.பி.ஐ, பீம் செயலி, ருபே கார்ட் போன்றே இதுவும் தேசம் கடந்து புகழ் பெறும் என்பது திண்ணம்.

**இ - ரூபி என்றால் என்ன?**

இ - ருபி என்பது ஒரு கியு. ஆர் குறியீடு அல்லது குறுஞ்செய்தி அடிப்படையிலான மின் ரசீது முறை. இது பயனாளிகளின் அலைபேசிக்கு வழங்கப்படுகிறது. இந்த தடையற்ற பணம் செலுத்தும் முறையை பயன்படுத்துபவர்கள், அதனை பணமாக்க வங்கி கணக்கு அட்டை, இணையதள வங்கிக் கணக்கு, மின்னணு பரிமாற்ற சேவைகளை தேடி ஓடவேண்டிய அவசியம் இல்லை. இதன் மூலம் பாரதம் இன்று டிஜிட்டல் பண பரிவர்த்தனைத் துறையில் மற்றொரு மைல்கல்லை எட்டியுள்ளது.

ஆன்லைன் கட்டணத்தை எளிதாகவும் பாதுகாப்பாகவும் மாற்றுவதை கருத்தில் கொண்டு, தேசிய என்.சி.பி.ஐ, நிதி சேவைகள் துறை, சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம், தேசிய சுகாதார ஆணையம் ஆகியவற்றுடன் இணைந்து இந்த தளம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த பரிவர்த்தனையில் நடுவில் இடைத்தரகர் யாரும் இருக்க மாட்டார்கள். எனவே, பயனாளிகளுக்கான முழு பலன்களும் எந்த கசிவும் இன்றி நேரடியாக அவர்களை சென்றடையும்.

இ - ருபி தளத்தை ஆயுஷ்மான் பாரத், பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா, தாய் மற்றும் குழந்தைகள் நலத்திட்டங்கள், உர மானியம், காசநோய் ஒழிப்பு திட்டங்கள், ஊட்டச்சத்து திட்டம் உள்ளிட்ட பல சமூக நலத் திட்டங்களுக்கு பயன்படுத்தலாம். தனியார் துறையினரும் இந்த டிஜிட்டல் வவுச்சர்களை தங்கள் ஊழியர் நலன் மற்றும் பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு திட்டங்களின் ஒரு பகுதியாகப் பயன்படுத்தலாம்.

யு.பி.ஐ எனப்படும் யூனிஃபைட் பேமெண்ட் இன்டர்ஃபேஸ் என்பது மொபைல் ஆப் மூலம் வங்கிக் கணக்கிற்கு உடனடி பணப் பரிமாற்றத்தை மேற்கொள்ளும் ஒரு பண பரிவர்த்தனை முறை. இந்த இ - ருபியும் யு.பி.ஐ இயங்குதளத்தை பயன்படுத்தியே உருவாக்கப்பட்டது ஆனால் அதை பணமாக்க தனியாக ஒரு மொபைல் ஆப் பயன்பாடு தேவையில்லை.

விஜயபாரதம்

# ஆடிப்பெருக்கு

ஆடிப்பெருக்கு என்பது ஆடி மாதம் 18ம் நாள் கொண்டாடப்படும் ஹிந்துக்கள் பண்டிகை. சில பகுதிகளில் இதனை ஆடி பதினெட்டாம் பெருக்கு என்கின்றனர். நல்ல மழை பெய்து ஆறுகள் புது வெள்ளம் பெருகி ஒடி வரும். இந்த நாளில் ‘நீரின்றி அமையாது உலகு’ என்று கூறி தண்ணீரின் அருமையை உலகுக்கு உணர்த்திய ஹிந்துக்கள் நீருக்கு விழா எடுக்கும் ஒரு அற்புதத் திருநாள் இது.

ஆடிப்பெருக்கன்று செய்யும் செயல்கள் பல்கி பெருகும். செல்வ வளம் பெருகும் என்பது நம்பிக்கை. எனவே, இன்றைய தினம் அனைவரும் புதிய முயற்சிகளை மேற்கொள்ளலாம். காவிரி, வைகை, தாமிரபரணி பாயும் நதிக்கரையோர மக்கள் ஆரத்தி எடுத்து மலர்கள் தூவி நம்மை வாழ வைக்கும் வற்றாத ஜீவ நதிகளை வணங்குவார்கள். உழவர்கள் இந்நாளில் பட்டம் பார்த்து விதை விதைப்பார்கள். இதனையொட்டியே ‘ஆடிப்பட்டம் தேடிவிதை’ என்ற பழமொழியும் வந்தது.

ஆடிப்பெருக்கன்று காவிரியில் புனித நீராடுவது சிறப்பு. இதனால் திருமணம் கைகூடும், குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்பது நம்பிக்கை. ஆடிப்பெருக்கன்று புது மணப்பெண்கள் புதிய மஞ்சள் கயிறை மாற்றிக்கொள்வார்கள். சுமங்கலி பெண்கள் தாலி பெருக்கி போடுவார்கள். இதன்மூலம் கணவரின் ஆயுள் அதிகமாகும் என்ற நம்பிக்கை.

காவிரி அன்னையை கர்ப்பிணியாக பாவித்து வளைகாப்பு செய்வது போல பலவகை உணவுகளை படைத்து மஞ்சள் சரடு, காதோலை கருகமணி, பூமாலை, வளையல், தேங்காய், பழம், அரிசி, வெல்லம் வைத்து வணங்கி புதிய மஞ்சள் சரடுகளை கட்டிக்கொள்வார்கள். ஆண்களும் தங்கள் கைகளில் மஞ்சள் சரடுகளை கட்டிக்கொள்வார்கள். சிலரது வீடுகளில் முளைப்பாறி வளர்த்து எடுத்து வந்து நீர் நிலைகளில் கரைத்து விடுவார்கள்.

இந்த ஆண்டு நல்ல மழை பெய்து ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது என்றாலும் கொரோனா வைரஸ் பரவல், தமிழக அரசின் அதீத கட்டுப்பாடுகள் காரணமாக மக்கள் நீராட அனுமதிக்கப்படவில்லை என்பதால் நதிக்கரை, ஆற்றங்கரைகளில் பண்டிகைகள் களைகட்டவில்லை. எனவே, இன்றைய சூழ்நிலையில் நம்மால் ஆற்றங்கரை, நதிக்கரைகளுக்கு போகமுடியாவிட்டாலும் வீட்டிலேயே




சமைத்து படையலிட்டு காவிரி அன்னையை வீட்டு வாசலில் இருந்தே வணங்கலாம். அனைத்து நலங்களையும் வளங்களையும் பெறலாம்.

விஜயபாரதம்

# தாய்பால் எனும் அருமருந்து



விஜயபாரதம்

பிறந்தவுடன் குழந்தைக்குக் கிடைக்க வேண்டிய முதல் பரிசு தாய்ப்பால். ஆகஸ்ட் 1 முதல் 7ம் தேதிவரை 'உலக தாய்ப்பால் வாரம்' கொண்டாடப்படுகிறது. தாய்ப்பாலின் மகத்துவம், அதை தருவதால் தாய்க்கும் சேய்க்கும் ஏற்படும் நன்மைகள் போன்றவை குறித்த விழிப்புணர்வை மக்களிடத்தில் ஏற்படுத்த இந்த வாரம் கொண்டாடப்படுகிறது.

தாய்ப்பால் குடித்து வளரும் குழந்தைகளுக்கு நோயின் தாக்கம் குறைவாகவே ஏற்படுகிறது, அந்த குழந்தைகள், மற்ற உணவுகளையும் பானங்களையும் உண்டு வளர்ந்த குழந்தைகளை விட ஊட்டமாகவே இருக்கின்றன. பிறந்து ஆறு மாதம் வரை எல்லா குழந்தைகளுக்கும் தாய்ப்பால் மட்டுமே கொடுக்கப்பட்டால், ஒரு ஆண்டிற்கு சுமார் 1.5 மில்லியன் சிசுக்களை காப்பாற்ற முடியும். தாய்ப்பாலுக்கு மாற்றாக, குழந்தைகளுக்கு தரப்படும் பால் பவுடர், அல்லது மாற்று உணவுகளால் சிசுக்களின் ஆரோக்கியம் பாதிப்படையலாம்.

நீடித்து தாய்ப்பால் ஊட்டி வந்ததன் காரணமாகவே மார்பகப் புற்றுநோய்த் தாக்கம் 20 வருடங்களுக்கு முன்புவரை பெண்களிடத்தில் குறைவாகவே இருந்தது. குழந்தை பிறந்த உடன் அடிக்கடி தாய்ப்பால் கொடுக்க, 'ஆக்சிடோசின்' எனும் ஹார்மோன் சுரப்பு அதிகரிக்கும். அதனால், பிள்ளை பெற்ற பின் உண்டான அதிக ரத்த இழப்பை ஈடு செய்யப்படும். கருப்பை வீக்கம் சரியாகும். இந்த ஹார்மோன் தாயின் உடலும் மனதும் நல்ல நிலையில் இருக்க உதவுகிறது.

பிரசவ காலத்தில் சர்க்கரை நோய் பாதிப்படைந்த தாய்மார்களில் மூன்றில் ஒருவருக்கு, பிற்காலத்தில் நீரழிவு நோய் வரும் சாத்தியம் அதிகம். நீடித்துப் பாலூட்டுவது, நீரழிவு நோய் வராமலிருக்க உதவும். தாய்ப்பால் ஊட்டுவதால் தாய் உண்ட உணவில் உள்ள 'கலோரி' குழந்தைக்கும் செல்லும், இது பிரசவ காலத்தில் அதிகரித்த உடல் எடையைக் குறைக்கவும் உதவுகிறது. தாய்ப்பால் தருவது பெண்களுக்கு முகப் பொலிவையும் அழகையும் கூட்டுகிறது. ரத்த அழுத்தத்தைச் சீராக வைக்கிறது.

பெரும்பான்மையான தாய்மார்களினால் தாய்ப்பால் நிச்சயமாக ஊட்டமுடியும். தாய்ப்பாலூட்டுவதற்கு தைரியமில்லாத பெண்களுக்கு, கணவர், குடும்பத்தார், நண்பர்கள், உறவினர்களின் ஊக்கமும், நடைமுறை ஆதரவும் தேவை. மருத்துவர் உள்ளிட்ட சுகாதார துறை அலுவலர்கள், பெண்களுக்கான அமைப்புகளும் இதில் பெரும் பங்காற்ற முடியும்.